பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

07 03 2026 SATURDAY 6 30 PM

<u>வணக்கம் - மாநிலச் செய்திகள்</u>

<u>தலைப்புச் செய்திகள்</u>

1) நாட்டின் வளர்ச்சியில் மகளிர் சக்தி, முக்கியப் பங்காற்றுவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2) தென்னை விவசாயிகளின் பிரச்சினைக்கு தீர்வு காண அரசு உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்று மத்திய வேளாண் அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.

3) பிரதமரின் சீரிய வழிகாட்டுதலால்  மக்கள் மருந்தகங்கள் சிறப்பான சேவையை அளித்து வருவதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

4) தமிழகத்தில் சட்டம் ஒழுங்கை பாதுகாக்கவும், போதைப்பொருள் புழக்கத்தை தடுக்கவும் திமுக அரசு தவறிவிட்டதாக பிஜேபி மாநிலத் தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

5) Kalaburagi சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் வைஷ்ணவி அட்கர் - அங்கிதா ரெய்னா இணை பட்டம் வென்றது.

>>>>>>><<<<<<

நாட்டின் வளர்ச்சியில் மகளிர் சக்தி, முக்கியப் பங்காற்றுவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

நாட்டை கட்டமைப்பதில் பெண்களின் பங்கு என்ற தலைப்பில் மத்திய அமைச்சர் திருமதி. அன்னபூர்ணா தேவி எழுதிய கட்டுரையை தமது சமூகவலைதளத்தில்

பகிர்ந்துள்ள பிரதமர், வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதற்கான பொருளாதாரத்தை மகளிர் சக்தி எவ்வாறு உருவாக்கித் தருகிறது என்பதை இந்த கட்டுரை தெளிவாக எடுத்துரைப்பதாக கூறியுள்ளார்.

>>>>>>><<<<<<

தென்னை விவசாயிகளின் பிரச்சினைக்கு தீர்வு காண அரசு உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்று மத்திய வேளாண் அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.

சென்னை, தரமணியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், தென்னை உற்பத்தியை பாதிக்கும் வெள்ளைப் பூச்சியின் தாக்கத்திலிருந்து பாதுகாப்பதற்கு மத்திய அரசு உதவிடும் என்று கூறினார்.

தென்னை மரங்களின் உற்பத்தி திறன், 60 ஆண்டுகளுக்குப் பின், குறைவதாக விவசாயிகள் தெரிவிக்கும் கோரிக்கையை அரசு பரிசீலிக்கும் என்றும் தென்னை வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கு விவசாயிகளுக்கு தேவையான உதவிகள் செய்து தரப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

தேங்காயை பதப்படுத்துவதன் மூலம். விவசாயிகளுக்கு கூடுதல் வருவாய் கிடைக்கும் என்றும் அவர் கூறினார்.

இதற்கான வசதிகள் ஏற்படுத்தித் தரப்படும் என்றும் திரு. சிவராஜ் சிங் சௌஹான் தெரிவித்தார்.

>>>>>>><<<<<<

வாக்களிக்க தகுதியுள்ள எவரும் வாக்காளர் பட்டியலிலிருந்து விடுபடக்கூடாது என்ற நோக்கிலேயே, வாக்களர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டதாக தலைமை தேர்தல் ஆணையர் திரு. Gyanesh Kumar தெரிவித்துள்ளார்.

கேரள மாநில சட்டப்பேரவை தேர்தலை ஒட்டி, கொச்சியில் நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் பேசிய அவர், குறைபாடுகள் இல்லாத வாக்காளர் பட்டியல், ஜனநாயகத்தின் அடித்தளமாக விளங்குகிறது என்று கூறினார்.

ஜனநாயக மாண்புகளை கடைபிடிப்பதில் கேரள மாநிலம் பிற மாநிலங்களுக்கு முன்னுதாரணமாக திகழ்கிறது என்றும், பிற மாநிலங்களுக்கு வழிகாட்டியாகவும் உள்ளது என்று திரு. Gyanesh Kumar குறிப்பிட்டார்.

>>>>>>><<<<<<<

பிரதமர் திரு. நரேந்திர மோடியின், சீரிய வழிகாட்டுதலால் மக்கள் மருந்தகங்கள் தொடங்கப்பட்டு, சிறப்பான மருத்துவ சேவையை அளித்து வருவதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

பிரதமரின் மக்கள் மருந்தக தினத்தை ஒட்டி அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், லட்சக்கணக்கான மக்கள் குறைந்த விலையில், தரமான மருந்துகளை பெற்று தங்கள் உடல்நலத்தை பேணிக்காத்து வருவதாக தெரிவித்துள்ளார்.

அனைவருக்கும் தரமான மருத்துவ சேவை கிடைக்க வேண்டும் என்ற மத்திய அரசின் உன்னத நோக்கத்தை மக்கள் மருந்தகங்கள் உறுதி செய்து வருவதாகவும் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

இதற்கிடையே, தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டியில் செயல்பட்டு வரும் மக்கள் மருந்தகங்கள் மூலம், ஜெனரிக் மருந்துகளை மக்கள் கேட்டு வாங்கி பயன்படுத்துவதாக மருந்தக உரிமையாளர் திருவருட்செல்வன் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் – உரிமையாளர் 37 செகண்ட்ஸ்)

இந்த மக்கள் மருந்தகங்களின் மூலம், தரமான மருந்துகள் தங்களுக்கு குறைந்த விலையில் கிடைப்பதாக வேலூர் மாவட்டத்தைச் சேர்ந்த பயனாளிகள் தெரிவித்தனர்.

(சவுண்ட் பைட் – பயனாளிகள் 38 செகண்ட்ஸ்)

>>>>>>><<<<<<<

தமிழகத்தில் கடந்த ஐந்தாண்டுகளில் 2 கோடியே 60 லட்சம் குடியிருப்புகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டுள்ளதாக மாநில நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு. கே.என். நேரு தெரிவித்துள்ளார்.

அரியலூரில் சுமார் 12 கோடி ரூபாய் மதிப்பில் கட்டப்பட்ட புதிய பேருந்து நிலையத்தை மாநில அமைச்சர் திரு. சிவசங்கருடன் இணைந்து திறந்து வைத்துப் பேசிய

அவர், ஆறுகளில் கிணறுகள் அமைக்கப்பட்டு, தண்ணீர் வழங்கப்பட்டு வருவதாகவும் கூறினார்.

பழுதடைந்த குடிநீர் குழாய்களை சீரமைக்கும் பணிகளும் நடைபெற்று வருவதாக அமைச்சர் தெரிவித்தார்.

>>>>>>><<<<<<<

தமிழக ஆளுநர் திரு. ஆர். என். ரவியை, முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் இன்று சந்தித்து பேசினார்.

இந்த சந்திப்பு மரியாதை நிமித்தமானது என்று மக்கள் மாளிகை வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>>><<<<<<<

மருத்துவ துறையில் பணிநியமனம், பதவி உயர்வு மற்றும் பணியிட மாறுதல்கள், கலந்தாய்வு மூலம் மிகுந்த வெளிப்படைத்தன்மையுடன் நிரப்பப்பட்டு வருவதாக மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

சென்னை ஓமந்தூரார் அரசு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனையில் 115 மருத்துவ அலுவலர்கள் மற்றும் மருத்துவ ஊழியர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கிப் பேசிய அவர், மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியத்தின் மூலம், காலியாக உள்ள மருத்துவப் பணியிடங்களை நிரப்புவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக தெரிவித்தார்.

மாநிலத்தில், தற்போது காலியிடங்களே இல்லாத சூழ்நிலை உருவாக்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

சித்தா, ஆயுஷ் மருத்துவர்கள், பல் மருத்துவர்களுக்கான ஊதியம், வரும் மே மாதம் முதல் 40 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்றும் அவர் அறிவித்தார்.

இதேபோன்று மருத்துவத் துறையில், தற்காலிக மற்றும் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றி வரும் ஊழியர்களுக்கும் மாத ஊதியம் உயர்த்தப்படுவதாகவும் திரு. மா. சுப்பிரமணியன் தெரிவித்தார்.

>>>>>>><<<<<<<

தமிழகத்தில் சட்டம் ஒழுங்கை பாதுகாக்கவும், போதைப்பொருள் புழக்கத்தை தடுக்கவும் திமுக அரசு தவறிவிட்டதாக பிஜேபி மாநிலத் தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக, அவர் இன்று வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், வீட்டில் உள்ள பெண்களுக்கு பாதுகாப்பற்ற சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

சென்னை, ராயப்பேட்டையில் வீட்டில் இருந்த பெண்ணிடம், காவலர் சீருடையில் வந்த ஒருவர், அத்துமீறி நடந்துகொண்ட சம்பவம் அதிர்ச்சி அளிப்பதாக உள்ளது என்றும் திரு. நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

>>>>>>><<<<<<<

மாவட்டச் செய்திகள்

தூத்துக்குடியில் 136 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள அரசு உயர் சிறப்பு பல்நோக்கு மருத்துவமனையை துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் இன்று திறந்து வைத்தார்.

>>>>>>><<<<<<<

வேலூர் மாவட்டத்தில், பாலாறு மற்றும் பொன்னை ஆற்றின் குறுக்கே சுமார் 70 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட தடுப்பணைகளை மாநில அமைச்சர் திரு. துரைமுருகன், காணொலி வாயிலாக திறந்து வைத்தார்.

>>>>>>><<<<<<<

பெரம்பலூரில் சாலை பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வுப் பேரணி இன்று நடைபெற்றது.

>>>>>>><<<<<<<

நீலகிரி மாவட்டம், முதுமலை புலிகள் காப்பகத்தில் பாறு கழுகுகள் இரண்டு நாள் கணக்கெடுப்பு இன்று தொடங்கியது.

>>>>>>><<<<<<<

கடலூர் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டத்தின் கீழ் சிறப்பாக செயல்பட்ட அங்கன்வாடி பணியாளர்களுக்கு ஆட்சியர் திரு. சிபி ஆதித்யா செந்தில் குமார் சான்றிதழ்களை வழங்கினார்.

>>>>>>><<<<<<<

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு, கள்ளக்குறிச்சியில் மினி மாரத்தான் ஓட்டம் நடைபெற்றது.

>>>>>>><<<<<<<

காஞ்சிபுரத்தில், சட்டப்பேரவை தேர்தல் பணியில் ஈடுபடும் மண்டல அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்பு ஆட்சியர் திருமதி. சினேகா தலைமையில் நடைபெற்றது.

>>>>>>><<<<<<<

விளையாட்டுச் செய்திகள்

Kalaburagi-யில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் வைஷ்ணவி அட்கர் - அங்கிதா ரெய்னா இணை பட்டம் வென்றது.

மகளிர் இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்தில் இந்த இணை 6-2, 6-2 என்ற செட்கணக்கில், இந்தியாவின் Akaanksha Dileep – Soha Sadiq இணையை வென்றது.

>>>>>>><<<<<<<

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான மகளிர் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் இரண்டாம் நாளான இன்று இந்தியா இரண்டாவது இன்னிங்ஸின் ஆட்ட நேர இறுதியில் 6 விக்கெட் இழப்பிற்கு 105 ரன் எடுத்துள்ளது.

பெர்த்தில் நடைபெற்று வரும் இப்போட்டியில், இந்தியா முதல் இன்னிங்ஸில் 198 ரன் எடுத்தது.

ஆஸ்திரேலியாவின் முதல் இன்னிங்ஸ் ஸ்கோர் 323 ரன்.

>>>>>>><<<<<<<

ஐஎஸ்எல் கால்பந்து போட்டியில் கொச்சியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் சென்னை - கேரளா அணியை எதிர்கொள்கிறது.

>>>>>>>END<<<<<<<